**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 236/2019**

**வா.சா.2 – சுசில் குமார் குல்குல்யா**

**<u>17-02-2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. ஆனால் பேசினால் புரிந்து கொள்வேன் தமிழ் பேசவும் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தையும் எனது சகோதரர் கூறி தெரிந்து கொண்டேன். சந்தோஷ் ஜெயின் எனது சகோதரரின் மனைவி. 1994 ஆம் ஆண்டு ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் சரியாக உள்ளது என்றால் சரிதான். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் ஆமாம். 1994 ஆம் ஆண்டு ஆவணத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் சந்தோஷ் ஜெயின் கூறியதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். சந்தோஷ் ஜெயின் எனது உறவினர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.